பாபு தையல் இயந்திரம் திருத்துமிடம்



0776906182


# தினப்புயல்

PTN news

THINAPPUYAL

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of. N.A :- RBN/4/3/06


கலையரசி நகைமாடம்



புதுக்குடியிருப்புச் சந்தி, புதுக்குடியிருப்பு.
T.P- 0770457661

மலர்-02 Tel&Fax- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் - 36

## இன்று முதல் வாகன அனுமதிப்பத்திரங்களை வழங்கும் பணி ஆரம்பம்



மேல் மாகாணத்தில் பதிவு செய்யப்பட்ட வாகனங்களுக்கான அனுமதி பத்திரங்களை வழங்கும் நடவடிக்கை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மோட்டார் சைக்கிள்கள் மற்றும் முச்சக்கர வண்டிகள் தவிர்ந்த ஏனைய வாகனங்களுக்கு அனுமதிப்பத்திரங்களை பெற்றுக் கொள்ள முடியும்.

அண்மையில் கணினி கட்டமைப்பில் ஏற்பட்ட பாதிப்பு காரணமாக இந்த நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டது. இன்று 15 ஆம் திகதி முதல் இந்த அனுமதி பத்திரங்களை பெற்றுக் கொள்வதற்கு வாகன உரிமையாளர்களுக்கு சந்தர்ப்பம் உள்ளதாக மேல்மாகாண மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம் தெரிவித்துள்ளது. (03)

## கருங்கல், மணல், மண், சரளை மற்றும் களிமண் போக்குவரத்து குறித்த சுற்றறிக்கை

கருங்கல், மணல், மண், சரளை மற்றும் களிமண் அகழ்வு, போக்குவரத்து மற்றும் வர்த்தகம் தொடர்பான உரிமங்களை வழங்குவது குறித்த புதிய சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.



அபிவிருத்திக்கு முக்கியத்துவமளித்தல், தனியார் தொழில் முயற்சியாளர்கள், சிறிய சுயதொழில் மற்றும் மரபு ரீதியான தொழில்களில் ஈடுபடுபவர்களின் பொருளாதார வாழ்வாதார அவசியத்துக்காக நில வளங்களை பயன்படுத்தல் மற்றும் அவற்றை பெற்றுக்கொள்ளும் அடிப்படைகள் மற்றும் பொறிமுறைகளை ஆய்வு செய்வதற்காக ஜனாதிபதி அவர்களினால் ஜனாதிபதி செயலணி ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. (03)

## 18 - 19 வயது பாடசாலை மாணவர்களுக்கு தடுப்பூசி இன்று முதல்



*18 முதல் 19 வயதுக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான ஃபைசர் தடுப்பூசியின் முதல் டோஸ் செலுத்தும் வேலைத்திட்டம் இன்று (15) முதல் கொழும்பு மாவட்டத்தில் ஆரம்பமாகவுள்ளது.*

*அதன்படி, கொழும்பு மாவட்டத்தில் 4 கல்வி வலயங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கு தடுப்பூசி போடப்படவுள்ளது. சுகாதார அமைச்சகம் மற்றும் கல்வி அமைச்சகத்தால் செயற்படுத்தப்படும் இந்த வேலைத் திட்டம் காலை 8.30 முதல் பிற்பகல் 3.30 வரை முன்னெடுக்கப்படவுள்ளது. (03)*

## மெல்போர்ன் ஸ்டார்ஸை வீழ்த்தியது சிட்னி சிக்சர்ஸ்

மகளிர் பிக் பேஷ் தொடரின் நடப்பாண்டு சீசன் நேற்று ஹாபர்டில் கோலாகலமாக தொடங்கியது. இதில் நேற்று நடைபெற்ற முதல் லீக் ஆட்டத்தில் சிட்னி சிக்சர்ஸ் மகளிர் அணி, மெல்போர்ன் ஸ்டார்ஸ் மகளிர் அணியை எதிர்கொண்டது.




இப்போட்டி தொடங்குவதற்கு முன்னதாக மழை குறுக்கிட்டதால் ஆட்டம் 11 ஓவர்களாக குறைக்கப்பட்டது. இதில் டொஸ் வென்ற சிட்னி முதலில் மெல்போர்ன் அணியை பேட்டிங் செய்ய அழைத்தது.

அதன்படி களமிறங்கிய மெல்போர்ன் ஸ்டார்ஸ் அணிக்கு தொடக்க வீராங்கனை விலானி அரைசதம் அடித்து உதவினார். இதன் மூலம் 11 ஓவர்கள் முடிவில் அந்த அணி ஒரு விக்கெட்டை மட்டுமே இழந்து 99 ரன்களைச் சேர்த்தது. இதில் இறுதிவரை ஆட்டமிழக்காமல் இருந்த விலானி 54 ரன்களைச் சேர்த்தார். (03)

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல : 154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

## தொடரும் அதிபர், ஆசிரியர்களின் போராட்டம்

கொவிட் பரவலின் காரணமாக நாட்டினது அனைத்துப் பாடசாலைகளும் தற்காலிகமாக காலவரையறையின்றி அரசால் மூடப்பட்டிருந்தன. எனினும் தற்போது நாட்டில் கொவிட் நாளாந்த மரணங்கள் மற்றும் தொற்றாளர்களின் எண்ணிக்கையிலும் ஏற்பட்டிருக்கும் வீழ்ச்சியின் காரணமாக நாடு கொஞ்சம் கொஞ்சமாக வழமைக்குத் திரும்பி வரும் நிலையில், நாட்டின் அனைத்துச் செயற்பாடுகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மக்கள் சுகாதார வழிமுறைகளை தீவிரமாக தொடர்ந்தும் கடைபிடிக்குமாறு சுகாதாரத் தரப்பினரால் அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன் கண்காணிப்பு நடவடிக்கைகளும் தொடர்கின்றன.

எனினும் தற்போது அதிபர் மற்றும் ஆசிரியர்களின் தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து மாபெரும் போராட்டமொன்றை நடாத்தி வருகின்றனர். இப்போராட்டம் தொடர்பில் அரசுடன் பேச்சுக்கள் நடந்த போதும் உரிய தீர்வுகளின்றி இன்றும் போராட்டம் தொடர்கின்றது. இந்நிலையில் தான் நாட்டின் பாடசாலைகளை மீளவும் ஆரம்பிக்கும் நடவடிக்கைகளை அரசு எடுத்துள்ளது.

பாடசாலை ஆரம்பிக்கும் செயற்பாடு தொடர்பில், அரசாங்கத்தின் சில அமைச்சர்கள் ஆசிரியர் மற்றும் அதிபர்களுக்கு அச்சுறுத்தல் விடுப்பதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் குற்றம் சுமத்தியுள்ளார். கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார். எவ்வாறான அச்சுறுத்தல் விடுக்கப்பட்டாலும் தங்களது தொழிற்சங்க நடவடிக்கை தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என்றும் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

அத்துடன், கொழும்பு கல்வி வலயத்திலுள்ள 24,000 மாணவர்களுக்கு பைஸர் தடுப்பூசி செலுத்தும் பணிகள் இன்று (15) முதல் ஆரம்பமாகவுள்ளதென கொழும்பு கல்வி வலய பணிப்பாளர் ஜீ.என்.சில்வா தெரிவித்துள்ளார். இதன்படி விவேகானந்தா, தேர்ஸ்டன், விஷாகா, பெனடிக் ஆகிய கல்லூரிகளில் இந்த தடுப்பூசி செலுத்தும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். கல்விசாரா ஊழியர்களின் சேவையைப் பெற்றுக்கொள்வதற்காக எதிர்வரும் 21ஆம் திகதி பாடசாலைகள் திறக்கப்படவுள்ளன.

இந்நிலையில், பாடசாலைகளைத் திறப்பதற்கு முன்பதாக தங்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்க, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென கல்விசாரா ஊழியர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. பதவி நிலைகளின் அடிப்படையிலான பாகுபாடு, வருடாந்த இடமாற்றம் உள்ளிட்ட ஏழு கோரிக்கைகளுக்குத் தீர்வு வழங்கப்பட வேண்டும், தங்களது பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்காவிட்டால் எதிர்வரும் 21ஆம் திகதி, கல்விசாரா ஊழியர்கள் சேவைக்கு சமுகமளிக்கப்போவதில்லை என்றும் அச்சங்கம் குறிப்பிட்டுள்ளது.

## தடுப்பூசி: வயோதிபர்களுக்கு நோய் எதிர்ப்புச் சக்தி குறைவடையும் அபாயம்

சைனோபாம் மற்றும் சினோவெக் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொண்ட, 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு, 3ஆம் தடுப்பூசியை விரைவாக செலுத்துமாறு தடுப்பூசி ஏற்றம் தொடர்பான விசேட ஆலோசனைக் குழு, கோரிக்கை விடுத்துள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

குறித்த தடுப்பூசிகளைப் பெற்றுக்கொண்ட, வயது முதிர்ந்தவர்களின் நோய் எதிர்ப்புச் சக்தி குறைவடைவதாக சர்வதேச ஆய்வுகளில் கண்டறியப்பட்டுள்ளதென ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மூலக்கூறு உயிரியல்துறை பிரிவின் பேராசிரியர் சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.

அதேநேரம், இலங்கையில் பயன்படுத்தப்படும் தடுப்பூசிகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் குறித்த அறிக்கை, நேற்று அல்லது இன்று வெளியிடப்பட உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனுக்குப் பிணை

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு சுமார் 6 மாதங்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். தலா 50 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் அவரை விடுவிக்கக் கொழும்பு கோட்டை நீதிவான் பிரியந்த லியனகே உத்தரவிட்டார்.

இது தொடர்பான வழக்கு நேற்று (14) நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதேவேளை, தனது வீட்டில் பணியாற்றிவந்த சிறுமி ஹிஷாலினி மரணித்தமை தொடர்பிலும் நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், குறித்த வழக்கு தொடர்பான விசாரணைகளுக்காக கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றிலும் அவர் முன்னிலைப்படுத்தப்பட்டார். அதன்போது, அவ்வழக்கிலும் அவருக்கு பிணை வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

**நாட்டில் மேலும் 21 கொவிட் மரணங்கள் நேற்று (14.10.2021) பதிவாகியுள்ளன. இதற்கமைய நாட்டில் பதிவாகியுள்ள கொவிட் மரணங்களின் மொத்த எண்ணிக்கை 13,429 ஆக அதிகரித்துள்ளது. அத்துடன் நேற்று 674 பேருக்கு கொவிட் தொற்று உறுதியாகியுள்ளது. இதற்கமைய இதுவரை அடையாளம் காணப்பட்ட கொவிட் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 529,755 ஆக அதிகரித்துள்ளது.**

## அந்நிய செலாவணி இருப்பு நிலை குறித்து மத்திய வங்கி விளக்கம்




நாட்டின் அந்நிய செலாவணி இருப்பு நிலை தொடர்பில் முன்னெடுக்கப்படும் தவறான கருத்துக்களால் தேவையற்ற அச்சத்தை ஏற்படுத்திக்கொள்ளத் தேவையில்லை. நெருக்கடியான இந்த காலப்பகுதியில் இது கவலைக்குறிதாக இருந்த போதிலும் மத்திய வங்கியினால் முன்னெடுக்கப்பட்டுள்ள நிதி நடவடிக்கையின் மூலம் அந்நிய செலாவணி இருப்பில் முன்னேற்றம் ஏற்படும் என்று இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் நம்பிக்கை வெளியிட்டார்.

இலங்கை மத்திய வங்கியில் நேற்று (14) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் இவ்வாறு குறிப்பிட்டார்.

இலங்கை மத்திய வங்கியில் வெளிநாட்டு சொத்து மறை பெறுமதி தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த ஜூலை மாதத்தில் 982 மில்லியன் அமெரிக்க டொலர்களாக காணப்பட்ட மத்திய வங்கியின் வெளிநாட்டு சொத்து ஆகஸ்ட் மாதத்தில் 400 மில்லியன் அமெரிக்க டொலர்களாக குறைவடைந்ததாகவும் தெரிவித்தார்.

நாட்டின் வரலாற்றில் 15 முறை இவ்வாறான மறைப் பெறுமதியை காண்பித்த பல சந்தர்ப்பங்கள் உண்டு. எனினும், அது தற்காலிகமானது. கொடுக்கல் வாங்கல் மூலம் இதன் பெறுமதி மாற்றமடையலாம். அந்த நிதி கொடுக்கல் வாங்கலை அடுத்த வாரம் மேற்கொள்ளக்கூடியதாக இருக்கும் என்றும் அவர் கூறினார்.

தற்போது மொத்த வெளிநாட்டு செலவாணி இருப்பு 4.1 பில்லியன் அமெரிக்க டொலர்களாகும். சீன மக்கள் வங்கியின் பேரம் பேசி மாற்றிக் கொள்ளப்பட்ட வசதியிலான 1.5 பில்லியன் அமெரிக்க டொலர்களையும் இது உள்ளடக்கியதாகும் என்றும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் மேலும் தெரிவித்தார்.

## இன்று முதல் வாகன...

இந்த திணைக்களத்தின் இணைய தளத்தின் ஊடாக ஒன்லைன் மூலம் அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன. கொழும்பு, கம்பஹா, களுத்துறை ஆகிய மாவட்டங்களில் அனைத்து பிரதேச செயலக பிரிவுகளில் ஊடாகவும் அனுமதி பத்திரங்களை பெற்றுக் கொள்ள முடியும் என மேல் மாகாண ஆளுநர் குணதிலக்க தெரிவித்துள்ளார். தகவல் தொழில்நுட்ப முகவர் நிலையத்துடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் பின்னர் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. ஓகஸ்ட் 12 ஆம் திகதி முதல் காலாவதியான மேல் மாகாணத்தில் பதிவு செய்யப்பட்ட வாகன உரிமையாளர்கள் டிசம்பர் 31 ஆம் திகதி வரை வழங்கப்பட்டுள்ள சலுகைக் காலத்தை பெற்றுக்கொள்ள முடியும் என மேல் மாகாண ஆளுநர் அலுவலகம் தெரிவித்துள்ளது. (அரசாங்க தகவல் திணைக்களம்)

## கருங்கல், மணல்...

நில வளங்களை அகழ்தல், போக்குவரத்து மற்றும் வர்த்தகத்துக்காக தற்போதுள்ள வழிமுறைகளினால் பொதுமக்கள், தனியார் நிறுவனங்களைப் போன்று அரச நிறுவனங்களும் முகங்கொடுத்து வருகின்ற கஷ்டங்களை ஒழித்து சுற்றாடலை பாதுகாக்கும் வகையில் உரிமங்களை வழங்குவதற்கான பொறிமுறையொன்றை அறிமுகப்படுத்தல் அச்செயலணியின் பொறுப்பாகும்.

அந்த ஜனாதிபதி செயலணியினால் உருவாக்கப்பட்ட புதிய பொறிமுறை தொடர்பான ஆலோசனைகளை உள்ளடக்கிய "கட்டிட கைத்தொழிலுக்காக பயன்படுத்தப்படுகின்ற கனிய வள அகழ்வு, போக்குவரத்து மற்றும் வர்த்தகம் தொடர்பான செயற்பாடுகளுக்கு" அமைச்சரவையின் அனுமதி கிடைத்துள்ளது. அதன் பிரகாரம் குறித்த அனைத்து நிறுவனங்களினதும் பிரதானிகள் கருங்கல், மணல், மண், சரளை மற்றும் களிமண் அகழ்வு, போக்குவரத்து மற்றும் வர்த்தகத்தை முறைமைப்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை தாமதிக்காமல் முன்னெடுக்க வேண்டுமென்று ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ. ஜயசுந்தர புதிய சுற்றறிக்கையின் மூலம் பணிப்புரை விடுத்துள்ளார்.

நில வளங்களை அகழ்வதற்கு பொருத்தமான இடங்களை முன்னரே கண்டறிதல், அவற்றை படவரைவுக்கு உட்படுத்தல், அந்நில வளங்கள் உரித்துடைய நிறுவனங்களை அடையாளம் காணல் மற்றும் அவசியமான அனுமதிப் பத்திரத்தை பெற்றுக்கொள்ளல் போன்ற செயற்பாடுகளை அந்தந்த நிறுவனங்களின் கட்டமைப்புக்குள் செயற்படுத்த வேண்டுமென்று நில வளங்கள் தொடர்பான ஜனாதிபதி செயலணி ஆலோசனைகளை முன்வைத்துள்ளது. குறித்த அனைத்து அரச நிறுவனங்களும் இதுவரை காலமும் தனித்தனியே செயற்படுத்தி வந்த பொறிமுறைக்குப் பதிலாக, ஒன்றுபட்ட பொறிமுறைக்குள் செயற்படுவதற்கு அவசியமான நிர்வாக அமைப்பை கட்டியெழுப்புதல் அல்லது மீளமைத்தல் முன்னெடுக்கப்பட வேண்டும்.

செயற்திட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகளுக்கமைய, புவிச்சரிதவியல் அளவை சுரங்கப் பணியகம் மூலம் இது வரை உரிமங்களை வழங்குதல் தொடர்பாக நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த செயற்பாடுகளை முழுமையாக மீள் ஒழுங்குபடுத்துவதற்கு அவசியமான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சுற்றறிக்கையின் மூலம் அறிவிக்கப் பட்டுள்ளது. தேவையில்லாமல் நுகர்வோரை பல்வேறு நிறுவனங்களின் மூலம் அனுமதியைப் பெற்றுக் கொள்வதை தடுப்பதற்கு புவிச்சரிதவியல் அளவை சுரங்கப் பணியகம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அதேபோன்று ஆலோசனை வழங்கப்பட்டுள்ள வகையில் மாவட்டச் செயலாளர், பிரதேச செயலாளர், கிராம உத்தியோகத்தர் மற்றும் ஏனைய அதிகாரிகளுக்கு அவசியமான அதிகாரத்தை வழங்கவும், அவசியமான சட்ட ஆவணங்களை பெற்றுக்கொடுக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சுற்றறிக்கையின் மூலம் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதி செயலணியினால் பரிந்துரைக்கப்பட்டுள்ள குறித்த கால எல்லைக்குள் தேவையான அனுமதி அல்லது சுற்றாடல் சான்றிதழ்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். சிலவேளை தற்போது நடைமுறையில் உள்ள கட்டளைகள், வர்த்தமானி அறிக்கைகள், சுற்றறிக்கையை மறுசீரமைக்க வழி ஏற்படலாம். அதற்கு அவசியமான அனுமதியை அமைச்சரவை வழங்கியுள்ளதால், அவ்வாறான மறுசீரமைப்புகள் இருப்பின் அவற்றை தாமதிக்காமல், முழுமைப்படுத்துவதற்கு உரிய அரச நிறுவனங்களின் தலைவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அகழ்வு உரிமத்தை வழங்குவதற்கு முன்னர், குறித்த அனைத்து அரச நிறுவனங்களுக்காகவும் பணம் அறவிடுதல் புவிச்சரிதவியல் அளவை சுரங்கப் பணியகத்தின் மூலம் நடைபெறுவதோடு, அப்பணம் சுற்றாடல் அமைச்சின் கீழ் உள்ள அனுமதி பெற்ற கணக்கில் வைப்பிலிடப்படல் வேண்டும். கட்டுமான கைத்தொழிலுக்காக பயன்படுத்தப்படுகின்ற கனிய வள அகழ்வு, போக்குவரத்து மற்றும் வர்த்தகம் தொடர்பான கட்டளை சட்டத்தின் கீழ் நியமித்துள்ள அறவிடுதலைத் தவிர, இதற்காக நிதி அமைச்சின் செயலாளரின் அனுமதியின்றி ஏனைய பண அறவிடுதல்கள் அல்லது அறிவிடுதல் தொடர்பான மறுசீரமைப்புக்களை செயற்படுத்தக்கூடாதென்று சுற்றறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

நில வளங்களை அகழ்வும் நடவடிக்கையின் போது, சுற்றாடல் தொடர்பான பிரச்சினைகள் ஏற்படுதல், அதன் காரணமாக பொதுமக்களின் எதிர்ப்புகள் தோன்றுதல், அவற்றுக்கு அவசியமான தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்கும் போது, நிறுவனங்களுக்கிடையில் தொடர்பாடல் பலவீனங்கள் நிலவுவதாக ஜனாதிபதி செயலணி கண்டறிந்துள்ளது. பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தும் போதும், மக்கள் எதிர்ப்புக்களை முகாமைத்துவம் செய்யும்போதும் அனைத்து நிறுவனங்களும் இணைந்து முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியதோடு, மாவட்ட மற்றும் தேசிய ரீதியாக ஸ்தாபிக்கப்பட்டுள்ள கண்காணிப்புக்குழு தாமதமின்றி ஒன்றுகூடி அவசியமான தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டும். அமைச்சரவை அனுமதித்துள்ள பொறிமுறைகள் தொடர்பாக உயரிய ஒத்துழைப்பை அனைத்து அரச நிறுவனங்களில் இருந்தும் பெற்றுக்கொள்வதற்கு அவசியமான தொடர்ச்சியான செயற்றிட்டம் ஒன்றையும் கண்காணிப்பையும் சுற்றாடல் அமைச்சு மேற்கொள்ளவேண்டும். யாதேனும் அரச நிறுவனம் ஒன்று அவசியமான ஒத்துழைப்பை வழங்காதவிடத்து, அது தொடர்பான முழுமையான அறிக்கையொன்றை தமக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ.ஜயசுந்தர சுற்றறிக்கையின் மூலம் மேலும் தெரிவித்துள்ளார்.

## 18-19 வயது பாடசாலை...

அதன்படி நல்லாயன் அரசினர் பாடசாலையை சேர்ந்த மாணவர்கள் புனித பெனடிக் கல்லூரியில் தமக்கான முதலாவது டோஸ் தடுப்பூசியை பெற்றுக்கொள்ளலாம்.

பின்வரும் பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் விவேகானந்தா கல்லூரியில் தமக்கான முதலாவது டோஸ் தடுப்பூசியை பெற்றுக் கொள்ளலாம்.

கணபதி வித்தியாலயம்
வுல்பெண்டேல் பெண்கள் பாடசாலை
விவேகானந்தா கல்லூரி
அல் ஹக்கீம் கல்லூரி
மத்திய கொழும்பு இந்து கல்லூரி

இதேவேளை, கொழும்பிலுள்ள விசாகா மற்றும் தேர்ஸ்டன் கல்லூரிகளில் தடுப்பூசிகள் அந்த பாடசாலை மாணவர்களுக்கு மட்டுமே வழங்கப்படும். மேலும், ஹோமாகம வலயத்தில் உள்ள 6 பாடசாலைகள், பிலியந்தல வலயத்தில் உள்ள 7 பாடசாலைகள் மற்றும் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர வலயத்தில் உள்ள 4 பாடசாலைகளிலும் முதலாவது டோஸ் தடுப்பூசி போடும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படும்.

## மெல்போர்ன் ஸ்டார்ஸை...

**இதையடுத்து இலக்கை துரத்திய சிட்னி அணியில் ஷஃபாலி வர்மா 8 ரன்னிலும், ஆஷ்லே கார்ட்னர், எல்லிஸ் பெர்ரி தலா 7 ரன்னிலும் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தனர். இருப்பினும் மறுமுனையில் அதிரடியாக விளையாடி வந்த ஆலிசா ஹீலி அரைசதம் அடித்து அணியின் வெற்றிக்கு வழிவகுத்தார். 10 ஓவர்களிலேயே சிட்னி சிக்சர்ஸ் அணி இலக்கை எட்டி 6 விக்கெட் வித்தியாசத்தில் மெல்போர்ன் ஸ்டார்ஸ் அணியை வீழ்த்தி வெற்றி பெற்றது.** (அப்துல் ஜெப்பார் அப்துல்லா)

## தனியார் துறை பஸ் சேவையை வீழ்ச்சியடைய ஒரு போதும் இடமளிக்கமாட்டேன்

தனியார் துறை பஸ் சேவையை வீழ்ச்சியடைய ஒரு போதும் இடமளிக்க மாட்டேன் என போக்குவரத்து அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார். இரத்தினபுரி மாவட்டத்தில் உள்ள தனியார் பஸ் உரிமையாளர்களுக்கு நிவாரணம் வழங்கும் நிகழ்வு. நேற்றைய முன்தினம் சப்ரகமுவ மாகாண சபை கேட்போர் கூடத்தில் சுகாதார வழிமுறைகளுக்கமைய இடம்பெற்றது. இந்த வைபவத்தில் உரையாற்றுகையிலேயே அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில். நாட்டு மக்களுக்கு தனியார் துறை பஸ் சேவை மகத்தானது. இருப்பினும். தற்போதைய கொவிட் தொற்று பரவல் காரணமாக. இலங்கையில் தனியார் பஸ் சேவை வீழ்ச்சியடைந்துள்ளது. இந்த பஸ் சேவையை பாதுகாப்பது நம் அனைவரினதும் பொறுப்பும் கடமையும் ஆகும். எனவே. தனியார் பஸ் சேவையை மீண்டும் கட்டியெழுப்புவது தற்போதைய அரசாங்கத்தின் குறிக்கோள் ஆகும். தனியார் பஸ் சேவை வீழ்ச்சியடைய நாம் ஒருபோதும் இடமளிக்க மாட்டோம். அதனால்தான் பஸ் சேவையில் ஈடுபட்டுள்ள தனியார் துறையுடன் இணைந்து. இந்த நிவாரணத் திட்டத்தை நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்த போக்குவரத்து அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. இந்தத் திட்டத்தை ஆரம்பிப்பதில் போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம முக்கிய பங்கு வகித்துள்ளார்.

தற்போது நாடளாவிய ரீதியில் சுமார் 20.000 பஸ்கள். மாகாணங்களுக்குள் மற்றும் மாகாணங்களுக்கு இடையேயான பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபட்டுள்ளன. இருப்பினும். கொவிட் தொற்றுநோய் பரவல் காரணமாக இந்த பஸ்களின் வருமானம் குறைந்துள்ள காரணத்தினால். அவற்றின் பராமரிப்பு நடவடிக்கைகளைக்கூட மேற்கொள்ள முடியாமல் போயுள்ளது. இதனால். டயர் தயாரிப்பாளர்கள். மசகு எண்ணெய் உற்பத்தியாளர்கள் மற்றும் வாகன உதிரிப்பாக விற்பனையாளர்கள் ஆகியோர் பஸ் சேவையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு இந்த நிவாரணத் திட்டத்தை வழங்க நிதி பங்களிப்பை வழங்கியுள்ளனர் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை. இந்த நிவாரணத் திட்டத்தின் கீழ். மீண்டும் போக்குவரத்து சேவையில் ஈடுபடுகின்ற பஸ்களுக்கு தேவையான டயர் மசகு எண்ணெய் மற்றும் வாகன உதிரிப்பாகங்களை சந்தை விற்பனை விலையிலும் குறைந்த. விசேட சலுகை விலையில் வழங்குவதாக போக்குவரத்து ஆணைக்குழுவுக்கு அந்த தனியார் நிறுவனங்கள் உறுதியளித்துள்ளன. எனவே. இந்த நிவாரனத் திட்டத்தின் கீழ். பஸ் உரிமையாளர் ஒருவர் சுமார் 100.000 ரூபாய் நிவாரணமாகப் பெறுவார் என்றும் அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி மேலும் தெரிவித்தரர்.

(அரசாங்க தகவல் திணைக்களம்)

# அத்தியாவசிய பொருள் விலை ஏற்றம் நடவடிக்கை எடுக்க வலியுறுத்தல்



'அத்தியாவசிய பொருட்களை பதுக்கி, விலை ஏற்றத்திற்கு காரணமாக இருப்போரை கண்டுபிடித்து, சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும்' என்று முதல்வர் ஸ்டாலினை, அ.தி.மு.க., ஒருங்கிணைப்பாளர் பன்னீர் செல்வம் வலியுறுத்தி உள்ளார். அவரது அறிக்கை: தமிழகத்தில் சில நாட்களாக, காய்கறிகள், பழங்கள், மளிகை உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் மற்றும் கட்டுமானப் பொருட்களின் விலை, விண்ணை முட்டும் அளவுக்கு உயர்ந்து கொண்டே செல்கிறது. பெங்களூரு தக்காளி கிலோ 20 ரூபாய்க்கு விற்கப்பட்ட நிலையில், இன்று 85 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. நாட்டுத் தக்காளி, வெங்காயம், பீன்ஸ், கேரட் போன்ற காய்கறிகளின் விலையும் கணிசமாக உயர்ந்துள்ளது.

பண்டிகை மற்றும் திருமண நாட்களை முன்னிட்டு காய்கறிகளின் தேவை அதிகரிக்கும் என்பதால், அவை கிடங்குகளில் பதுக்கப்படுகின்றன. இதன் வாயிலாக ஏற்பட்ட செயற்கை தட்டுப்பாடு தான், விலை உயர்விற்கு காரணம். உளுந்தம் பருப்பு விலை கிலோவிற்கு 22 ரூபாய் அதிகரித்துள்ளது. துவரம் பருப்பு, பாசி பருப்பு, கடலை பருப்பு விலையும், 15 ரூபாய் வரை அதிகரித்துள்ளது.

எண்ணெய் வகைகளின் விலையும், லிட்டருக்கு 10 ரூபாய் வரை உயர்ந்துள்ளது. இதர மளிகை பொருட்களான பூண்டு, புளி, கடுகு ஆகியவற்றின் விலையும் 10 ரூபாய் முதல் 20 ரூபாய் வரை உயர்ந்து உள்ளது. விலை ஏற்றத்திற்கு காரணமானவர்களை கண்டுபிடித்து, அவர்களை சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும். அத்தியாவசிய பொருட்கள் நியாயமான விலையில், மக்களுக்கு கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும். இது மாநில அரசின் கடமை. அப்போது தான் சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள மக்கள் சிறப்பாக வாழ முடியும். எனவே, விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என பன்னீர் செல்வம் கூறியுள்ளார்.

# கென்யாவில் கொலை செய்யப்பட்ட ஒலிம்பிக் வீராங்கனை

கென்யாவின் மெய்வல்லுநர் வீராங்கனை எக்னஸ் டிராபி அவரது வீட்டில் கொலை செய்யப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மேலும் அவரது கணவரால் கூரிய ஆயுதத்தினைக் கொண்டு அவர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர். இந்தநிலையில் கொலை செய்யப்பட்ட வீராங்கனையின் கணவர் தலைமறைவாகியுள்ளதாகவும் பொலிஸார் அவரை தேடி வருவதாகவும் தெரிவித்துள்ளனர்.




இவர் இரண்டு முறை உலக மெய்வல்லுநர் சம்பியன்ஷிப்பில் வெண்கலப் பதக்கம் வென்றுள்ளதுடன் அண்மையில் இடம்பெற்ற ஒலிம்பிக் 5,000 மீற்றர் ஓட்டப் போட்டியில் நான்காவது இடத்தைப் பிடித்தார்.

# ஜப்பானில் அதிகரிக்கும் சிறுவர் தற்கொலை



ஜப்பானில் 40 ஆண்டுகளில் தற்போது தற்கொலை செய்து கொள்ளும் சிறுவர்களின் எண்ணிக்கை உயர்ந்துள்ளதாக அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளன. கொரோனாபாதிப்பால்பாடசாலைகள் அனைத்தும் மூடப்பட்டு விட்டன. இந்த பள்ளிகளில் பயின்று வந்த 415 குழந்தைகள் தற்கொலை செய்துள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த எண்ணிக்கையானது கடந்தாண்டை ஒப்பிடுகையில் 10 தற்கொலைகள் உயர்ந்துள்ளது. மேலும் கொரோனா பெருந்தொற்றால் பள்ளி மற்றும் வீடுகளில் ஏற்பட்ட சூழ்நிலை மாற்றங்கள், குழந்தைகள் மனதளவில் பாதிக்கப்பட காரணமாக அமைவதாக கூறப்படுகிறது.

# தைவானில் தீ விபத்து – 46 பேர் உடல் கருகி பலி

தைவானில் அடுக்குமாடி குடியிருப்பில் ஏற்பட்ட தீ விபத்தில் 46 பேர் உயிரிழந்தனர், 41 பேர் காயமடைந்தனர்.

கிழக்காசிய நாடான தைவானின் காசியுங் நகரில், வணிக வளாகத்துடன் கூடிய அடுக்குமாடி உள்ளடக்கிய குடியிருப்பு கட்டடம் உள்ளது. 13 அடுக்கு மாடிகளை உடைய இந்த கட்டடத்தில் பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. தீ மளமளவென கட்டடம் முழுதும் பரவியதால், அதில் சிக்கி இருந்தவர்கள் வெளியே வர முடியாமல் தவித்தனர். தீயணைப்புப் படையினர், கடும் போராட்டத்திற்கு பின் தீயை அணைத்தனர்.

இந்த தீ விபத்தில் 46 பேர் உடல் கருகி பரிதாபமாக உயிரிழந்தனர் 41 பேர் காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதில் பலரின் உடல்நிலை கவலைக்கிடமாக இருப்பதால், பலி எண்ணிக்கை உயரலாம் என அஞ்சப்படுகிறது. தீ விபத்திற்கான காரணம் குறித்து பொலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.



# ரொறன்ரோ மிருகக் காட்சிசாலைக்கு செல்வோருக்கு முக்கிய அறிவிப்பு

கனடாவில் கொரோனா தடுப்பூசிகளை போட்டுகொண்டதால் தற்போது கொரோனா தொற்று பரவலில் தீவிரம் சற்று குறைந்துள்ளது. இதேவேளை ரொறன்ரோ மாகாணத்தை பொறுத்தவரையில் கொரோனா தாக்கம் குறைந்து வர தொடங்கியுள்ளது. இங்குள்ள மக்கள் தடுப்பூசி ஏற்றிக்கொள்ளும் நடவடிக்கையில் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டுள்ளனர்.

இந்நிலையில், ரொறன்ரோ மிருகக் காட்சிசாலைக்கு செல்வதற்கு கொரோனா தடுப்பூசி சான்றிதழ் அத்தியாவசியம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நடைமுறை எதிர்வரும் 25ம் திகதி முதல் அமுலில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் 12 வயதுக்கும் மேற்பட்ட அனைவரும் மிருகக் காட்சிசாலைக்குள் பிரவேசிப்பதற்கு முழுமையாக கொரோனா தடுப்பூசி போட்டிருக்க வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

ரொறன்ரோ மிருகக் காட்சிசாலை உள்ளக மற்றும் வெளியகப் பகுதிகளை உள்ளடக்கியது எனவும் இதனால் கொரோனா தடுப்பூசி சான்றிதழ் அத்தியாவசியம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான தடுப்பூசி சான்றிதழ் நடைமுறை பணியாளர்கள், வருகை தருவோர் மற்றும் விலங்கினங்களை பாதுகாக்கும் முன் எச்சரிக்கை நடவடிக்கையாக அறிமுகம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

# 2025ல் பயன்பாட்டுக்கு வரும் பறக்கும் டாக்ஸி

2025ம் ஆண்டில் பறக்கும் டாக்ஸியை உருவாக்க திட்டமிட்டுள்ளதாக பிரிட்டனின் வெர்டிகல் ஏரோஸ்பேஸ் நிறுவனம் கூறியுள்ளது.

இதன் தலைமைச் செயல் அதிகாரி ஸ்டீபன் ஃபிட்ஸ்பேட்ரிக் கூறுகையில், "அமெரிக்காவின் பிளான்க் செக் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளதாகவும், 2025ல் பறக்கும் டாக்ஸி மக்கள் பயன்பாட்டுக்கு வந்துவிடும் எனவும் தெரிவித்துள்ளார்.

சுமார் 4 பேரை ஏற்றிச் செல்லும் இந்த டாக்ஸியை தயாரிக்க, ஏவவான், ஹனிவெல், ரோல்ஸ்ராய்ஸ் மற்றும் மைக்ரோசாஃப்டின் எம்12 ஆகியன முதலீடு செய்ய முன்வந்துள்ளதாகவும் தகவல்கள் தெரிய வந்துள்ளன.

மேலும் விமானத்தை இயக்குவதற்கான வழிமுறைகள் குறித்து ஹீத்ரு விமான நிலையத்துடன் ஆலோசனையில் இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

**தன்னலம் சிறிதும் இல்லாமல், நிறைந்த அன்புடன் பழகுபவர்களே இப்போது உலகத்திற்குத் தேவைப்படுகிறார்கள்.**

**இரக்கம் உள்ள இதயம், சிந்தனை ஆற்றல் படைத்த மூளை, வேலை செய்யக்கூடிய கைகள் ஆகிய இந்த மூன்றும் நமக்குத் தேவை.**